30th September 1958] [Sri M. Kalyanasundaram]

High Court for taking over the mill on lease. But what I noted from our Government is that they have requested the Central Government to take over the mill. I want to know definitely what is happening in the matter.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government are examining the very suggestion which has been made by the Central Government.

MR. SPEAKER : Then there is no point in the hon. Member pressing his adjournment motion. I do not give my permission to the hon. Member to move the motion.

III.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

BILL PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House that the Madras General Sales Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 34 of 1958) has been passed by the Legislative Council on the 29th September 1958 without any recommendation.

IV.—CALLING ATTENTION TO THE FAMINE CONDITIONS IN NORTH ARCOT DISTRICT.

MR. SPEAKER : The hon. Member Sri S. M. Annamalai has given notice of a motion under rule 40 of the Assembly rules for calling attention to a matter of urgent public importance, namely, the famine condition in North Arcot district due to failure of monsoon. The hon. Member may move his motion.

SRI S. M. ANNAMALAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே 1957-ம் ஆண்டில், சர்க்கார் புள்ளி விவரங்களின் படி 38·6 அங்குலம் பெய்ய வேண்டிய மழைக்குப் பதிலாக 31 அங்குலம் தான் பெய்தது. 1958-ல் மழையே இல்லாத காரணத்தால், ஏறத் தாழ இரண்டு ஆண்டு காலமாக கடந்தாற்போல மழை பெய்யாததால், அங்கே இருக்கிற கிணறுகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாத காரணத்தால் மக்களும், கால்நடைகளும் மிகவும் கஷ்டப்படுகின்றன. ஒரு சுமை வைக்கோல் 5 அல்லது 6 ரூபாய் விற்பதினால், அவ்வளவு விலை கொடுத்து மாடுகளுக்குத் தீவனம் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, பாதிக்கு மேற்பட்ட மாடுகளை விற்றுவிட்டார்கள். இவ்வாறு வட ஆற்காடு மாவட்டத்திலே பஞ்சம் ஏற்பட்டிருப்பதால், அங்கே வேலை வாய்ப்புகள் இல்லாத காரணத்தினால், அங்குள்ள மக்கள் அண்மையிலுள்ள மைசூர் ராஜ்யத்திற்கு, ஷிமோகா, பத்திராவதி போன்ற இடங்களுக்கு வெளியேறிச் செல்லுகின்றனர்.

(Deputy Speaker in the Chair.)

தொடர்ச்சியாக, சரியான மழை இல்லாததால், இந்த மாவட்டத்திலுள்ள மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், கடன் நிவாரணச் சட்டம் 30—6—58-ம் தேதியோடு முடிவடைந்துவிட்டதால், கோர்ட்டுகளில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய கடன்களை இந்த ஆண்டு வசூல் செய்யாமலிருப்பதுடன், அங்கேயுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடிக் கொடுத்தால்,

[Sri S. M. Annamalai] [30th September 1958

அவர்கள் பிற மாகாணங்களுக்குச் செல்வதைத் தடுக்க முடியும். கிணறுகள் வெட்டுவதற்கு சப்ஸிடி கொடுத்து, மேலும் கிணறுகள் வெட்டி, சாகுபடி செய்வதற்கு உதவி செய்யவேண்டும். இந்த ஆண்டு விளைச்சலே இல்லாததால், வரி வஜா கொடுக்கவேண்டும். சென்ற ஆண்டு நவரைப் பயிர் கூட சரியாக விளையவில்லை. ஆணிக் கார்ப் பயிரும் அவ்வாறுதான். ஆகவே இந்த ஆண்டு வரி வஜா கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the Collector of North Arcot district has reported that no famine conditions are prevailing in any part of his district. Though the South-west monsoon did not set in properly, there was a rainfall ranging from 3·5 to 8 inches in August 1958. Sowing of dry crops such as groundnut, cholam, etc., has been completed. Standing crops under wells are in good condition. Paddy and ragi in restricted extents are being harvested. The level of water in the wells is slightly increased. There is no scarcity for drinking water. Some of the irrigation tanks have received a few days supply of water due to recent rains. Green grass in waste lands and tank beds, etc., is available for cattle to graze. There is no scarcity of food-grains. The Collector has reported that there is no marked increase in the prices of foodgrains warranting the opening of fair price shops. On the whole the seasonal conditions are encouraging. The regular North-east monsoon will be setting in October or November 1958. In view of the inability of the ryots to repay the loans granted to them in previous years, the Collector has recommended the postponement of the collection of loan arrears relating to fasli year 1367–68. He has also suggested that taking of coercive processes in respect of other loan arrears relating to earlier faslis should be deferred. These proposals are separately under examination. In order to bring down the price of fodder it has been suggested that the North Arcot District Supply and Marketing Society may be given facilities to procure fodder in Tanjore and Tiruchirappalli Districts and import it into North Arcot District by rail for distribution with a reasonable margin of profit. Instructions are being issued accordingly to the Registrar of Co-operative Socieies and the Collectors of Tanjore and Tiruchirappalli to take suitable action immediately.

SRI K. R. NALLASIVAM : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் கடந்த 23–ம் தேதியன்று, அசெம்பிளி விதி 40-ன் கீழ் நாசரத்பேட்டையில் நடக்கக்கூடிய போலீஸ் பலாத்காரத்தைப் பற்றி ஒரு பிரேரணையைக் கொடுத்தேன். இன்றைக்கு சபை முடிவடைகிறது, அது அவசரமானது, உடனே எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்ற முறையில் நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்று வரையிலும் சபை முன்பு அது வரவில்லை. இது அங்கத்தினருடைய உரிமையை பாதிக்கக்கூடியதில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member may ask the Hon. Minister concerned for information or he can meet the Hon. Speaker in his chamber and get the information required by him. It is not a point of order.